504 4

ஆத்திசூடி

நீதி கதா மாலை

மலர் 2

ஆரம்ப பாடசாலை மாணவர்க்காகவே
எழுதப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR
23 JAN 1933
MADRAS

பெரியகுளம்
M. S. சுப்பிரமணிய சாஸ்திரி
எழுதியது.

வி. சூ. சுவாமிநாதன்,
பப்ளிஷர் :: மதுரை

[விலை 0—2—6.

TB
031,6 (3)
N33
170823

ஆத்திசூடி

நீதி கதா மாலை

மலர் 2

OFFICE OF THE REGISTRAR
23 JAN 1933
MADRAS

பெரியகுளம்

M. S. சுப்பிரமணிய சாஸ்திரி

எழுதியது

மதுரை

வி. சூ. சுவாமிநாதன்

வெளியிட்டது

காபிரைட்] [விலை 0-2-6

170873

WUTT—First Edition—2000 Copies.

3024
894'8113

பொருளடக்கம்

1. தருமம் செய்ய வேண்டும்.
[தருமதத்தன் கதை] ... 7
2. கோபம் ஆகாது
[துருவாசர் சரிதம்] ... 9
3. தன்னால் இயன்றதைக் கொடுக்க வேண்டும்.
[கர்ணன் கதை] ... 10
4. தருமம் செய்வதைத் தடுக்கக்கூடாது.
[இந்திரன் கதை] ... 11
5. உள்ளதை வெளியிடக்கூடாது
[சோமன் கதை] ... 12
6. முயற்சியை விடக்கூடாது
[துருவன் சரிதம்] ... 13
7. பிறருக்குக் கொடுத்து உண்ண வேண்டும்.
[சிலம்பி கதை] ... 14
8. பொறாமை கூடாது.
[சிசுபாலன் சரிதம்] ... 15
9. ஒருவர் செய்த நன்றியை மறக்கக் கூடாது.
[பூரு கதை] ... 16
10. ஒழுங்கில்லாததைச் செய்யக் கூடாது.
[பரீக்ஷித்து சரிதம்] ... 17
11. வஞ்சக வார்த்தைகள் பேசக்கூடாது.
[யாதவர் சரிதம்] ... 18
12. அகாலத்தில் தூங்கக் கூடாது.
[முனிவர் கதை] ... 20
13. கெடுதி நினைக்கக் கூடாது.
[குடிலன் கதை] ... 21
14. பிறர் பொருளைத் திருடக்கூடாது.
[கார்த்த வீரியன் சரித்திரம்] ... 22
15. குற்றமான விளையாட்டுக் கூடாது
[அசமஞ்சன் கதை] ... 23
16. பொய்யை மெய்போல் பேசக்கூடாது
[கோபாலன் கதை] ... 24

17. பிறர்முகம் கோணும்படி பேசக்கூடாது
[துரியோதனன் கதை] ... 25
18. சூதாடுதல் கூடாது.
[தருமபுத்திரர் கதை] ... 26
19. சேரும் இடத்தைத் தெரிந்து சேரவேண்டும்.
[சல்லியன் சரிதம்] ... 27
20. பிறர் பழிக்கும்படி நடக்கக்கூடாது.
[தேவநிதி கதை] ... 28
21. தருமம் செய்ய வேண்டும்.
[ரகு மகாராஜன் கதை] ... 29
22. விஷ்ணுபக்தி யுடையவனாய் இருக்கவேண்டும்.
[சரதாசர் கதை] ... 30
23. பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாது.
[மாரீசன், சுபாகு சரிதம்] ... 31
24. பிறரைப் பழிக்கக்கூடாது.
[கந்தருவர் கதை] ... 32
25. பெரியோரையே துணைகொள்ள வேண்டும்.
[இந்திரன் கதை] ... 33
26. பொருளைக் காப்பாற்ற வேண்டும்.
[கோவலன் கதை] ... 34
27. கஷ்டகாலங்களில் மனம் தடுமாறக்கூடாது.
[பத்மினி சரிதம்] ... 35
28. விரோதிகளுக்கு இணங்கிப் பேசக்கூடாது.
[வலன் கதை] ... 36
29. பெரியோர் சொற் கேட்கவேண்டும்.
[ரோமபாதன் கதை] ... 37
30. தற்புகழ்ச்சி ஆகாது.
[வந்தி கதை] ... 38
31 தன்மை யறிந்து சிநேகிக்க வேண்டும்.
[குருவி கதை] ... 38
32. தாய் தந்தையரைக் காப்பாற்ற வேண்டும்.
[உத்தமன் கதை] ... 40

ஆத்திசூடி

நீதி வாக்கியங்கள்

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. ஐயம் இட்டு உண்.
8. ஔவியம் பேசேல்.
9. நன்றி மரவேல்.
10. இயல்பு அலாதன செயேல்.
11. வஞ்சகம் பேசேல்.
12. அனந்தல் ஆடேல்.
13. கெடுப்பது ஒழி.
14. கொள்ளை விரும்பேல்.
15. கோதாட்டு ஒழி.
16. சித்திரம் பேசேல்.
17. சுளிக்கச் சொல்லேல்.

18. சூது விரும்பேல்.
19. சேரிடம் அறிந்து சேர்.
20. சை எனத் திரியேல்.
21. தானமது விரும்பு.
22. திருமாலுக்கு அடிமை செய்.
23. தீவினை அகற்று.
24. பழிப்பன பகரேல்.
25. பெரியாரைத் துணைக் கொள்.
26. பொருள்தனை போற்றி வாழ்.
27. மனந் தடுமாறேல்.
28. மாற்றானுக்கு இடங்கொடேல்.
29. மேன்மக்கள் சொற்கேள்.
30. வல்லமை பேசேல்.
31. இணக்கமறிந் திணங்கு.
32. தந்தை தாய்ப் பேண்.

ஆத்திசூடி

நீதி கதா மாலை

மலர் 2

1. தருமம் செய்ய வேண்டும்

[தருமதத்தன் சரிதம்]

1. தருமதத்தன் என்ற பிராமணன் சிறு வயதிலேயே காட்டிற்குத் தவம் செய்யச்சென்றான். கடைசியாக நடுக்காட்டில் ஒரு குடிசையைக் கண்டான். அதில் ஒரு வேடன் தன் மனைவியுடன் வசித்து வந்தான். வேடன் தருமதத்தனைக் கண்டதும் அவனுக்கு ஆகாராதி கொடுத்து உபசாரம் செய்தான். வேடன் செய்வது அவன் மனைவிக்குப் பிடிக்கவில்லை.

2. தருமதத்தன் அன்றிரவு அவர்கள் குடிசையிலேயே தங்கினான். இதுவும் வேடன் மனைவிக்கு இஷ்டமில்லை. இரவில் ஒரு புலி, வேடன் குடிசைக்குள் நுழைந்து வேடனைக் கொன்று தூக்கிச் சென்றது.

3. மறுநாள் விடிந்ததும் தருமதத்தன் வேறிடம்சென்று தவஞ்செய்யத் தொடங்கினன். கடவுள் அவன் முன் தோன்றி, "அங்கதேசத் தரசனுக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது. அதைத் தங்கத் தட்டில் ஏந்தி, நீ உன் சந்தேகத்தைக் கேட்டால் அது சொல்லும்" என்று கூறி மறைந்தார்.

4. அவ்வாறே தருமதத்தன் அங்க தேசத் தரசனிடம் சொல்லி குழந்தையைத் தங்கத் தட்டில் ஏந்தி, "தருமம் செய்வதின் பலன் என்ன?" என்று கேட்டான். அதற்கு அக்குழந்தை, "அப்பா! நான் உனக்கு என் குடிசையில் ஆகாராதிகள் கொடுத்துஉதவியதனல் இவ்வரசபதவியை யடைந்தேன். என் மனைவி தருமம் செய்வதைத் தடுத்ததால் அவள் பன்றிக் குட்டியாகப் பிறந்திருக்கிருள்; இதுவே தருமத்தின் பலன், அறிவாய்" என்றது.

5. தருமதத்தனுக்கு ஆகாராதிகள் கொடுத்து உதவிசெய்த வேடன் அரசபதவி யடைந்தான். தருமத்தைத் தடுத்த வேடன் மனைவியோ கீழான பதவியை யடைந்தாள். ஆதலால்,

அறஞ்செய விரும்பு

——

2. கோபம் ஆகாது

[துருவாசர் சரிதம்]

1. அம்பரீஷன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் ஒரு விரதம் அனுஷ்டித்தான். அவனிடம் ஒரு முனிவர் சென்றார். அவர் பெயர் துருவாசர். அவர் தவஞ் செய்தவர்; மகா கோபம் உடையவர்.

2. அரசன் அவரை உபசரித்தான். சாப்பிட வேண்டினான். ரிஷி சம்மதித்தார். நீராடி வருவதாகச் சொல்லிச் சென்றார்.

3. முனிவர் வர சிறிது நேரமாயிற்று. விரத நேரம் தவறும்போல் இருந்தது. அதற்காக அரசன், ஒரு துளசி தளமும், கொஞ்சம் தண்ணீரும் மந்திரிகளின் சொல்படி சாப்பிட்டான்.

4. முனிவருக்கு இது தெரிந்தது. அவர் சாப்பிட்ட பின்புதான் அரசன் எதையும் சாப்பிட வேண்டும். ஆகையால் ரிஷி மாறாத சினம் கொண்டார். அரசனைக் கொல்ல ஒரு பூதத்தை ஏவினார். அரசன் விஷ்ணுவை நினைத்தான். சக்கராயுதம் வந்து, பின்பு பூதத்தைக் கொன்றது. அத்துடன் நில்லாமல் துருவாசரை மூன்று உலகிலும் துரத்திற்று. துருவாசர் கடைசியாக அம்பரீஷன்

காலில் விழுந்தார். முடிவில் அந்த அம்பரீஷனே துருவாசரைத் தப்புவித்தான்.

5. ரிஷியின் கோபமே அவருக்குத் தீங்கு விளைவித்தது. ஆதலால்,

ஆறுவது சினம்

---

3. தன்னால் இயன்றதைக் கொடுக்க வேண்டும்

[கர்ணன் கதை]

1. கர்ணன் துரியோதனனுடைய சிநேகிதன். இவர்கள் பாண்டவர்களுக்குப் பகைவர்கள். கர்ணன் காதில் இரண்டு குண்டலங்கள் இருந்தன. அவை தெய்வத் தன்மை பொருந்தியவை. அவைகளை அணிந்துகொண்டால், அவனை ஒருவராலும் ஜயிக்க முடியாது.

2. கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்கு வேண்டியவர். பாண்டவர்களுக்கும் துரியோதனனுக்கும் சண்டை நடந்தது. கிருஷ்ணபகவான் ஒரு பிராமண வேஷம் பூண்டார். கர்ணனிடம் சென்று குண்டலங்களை யாசித்தார்.

3. கர்ணன் கிருஷ்ணனுடைய எண்ணத்தை அறிந்தான். குண்டலங்களைக் கொடுத்தால் கர்ணனுக்குக் கெடுதல் ஏற்படும். அப்படி யிருந்தும் கர்ணன் தன்னால் முடிந்ததைக் கொடுக்க வேண்டும்

என்று எண்ணினன். கிருஷ்ணபகவானுக்கு அவர் கேட்டதைத் தன்னால் கொடுக்கக்கூடிய சக்தியிருப்பதைப்பற்றி கர்ணன் சந்தோஷித்தான். உடனே குண்டலங்களைக் கொடுத்தான். அதனால் என்றும் அழியாத புகழ்பெற்றான். ஆதலால்,

இயல்வது கரவேல்

---

4. தருமம் செய்வதைத் தடுக்கக்கூடாது

[இந்திரன் கதை]

1. சியவனர் என்று ஒரு ரிஷி இருந்தார். அவர் தொண்டு கிழவர். அசுவினி தேவர்கள் என்பவர்கள் தேவலோக வைத்தியர்கள். அவர்கள் ரிஷியை ஒரு சமயம் கண்டனர். அவருக்கு நீங்காத இளமை வரும்படி செய்தனர். முனிவர் சந்தோஷம் கொண்டார்.

2. சியவனர் ஒரு யாகம் செய்தார். அசுவினி தேவர்களுக்கும் யாக உணவில் ஒரு பங்கு தந்தார். தேவேந்திரன் "தரக்கூடாது" என்று தடுத்தான். முனிவர் கேட்கவில்லை. இந்திரன் கோபம் கொண்டான். வச்சிராயுதத்தை அவர்மீது எறிந்தான்.

3. முனிவர் ஒரு பூதத்தை உண்டாக்கினர். அது இந்திரனைத் துரத்திற்று. அவனுக்கு உதவி ஒருவரும் இல்லை. அதை ஜெயிக்க முடியவில்லை.

முடிவில் சியவனரிடமே வந்தான். மன்னிப்புக் கேட்டான். அவர் அவனைக் காப்பாற்றினர்.

4. இந்திரன் கொடுப்பதைத் தடுத்தான். அவமானம் அடைந்தான். ஆதலால்,

ஈவது விலக்கேல்

---

5. உள்ளதை வெளியிடக் கூடாது

[சோமன் கதை]

1. ஒரு ஊரில் சோமன் என்பன் இருந்தான். அவன் மிக ஏழை; தருமசீலன். ஒரு தினம் அவன் வீட்டுக்கு ஒரு முனிவர் வந்தார். சோமன் அவரை உபசரித்தான். முனிவர் சந்தோஷமடைந்தார். அவனுக்கு ஒரு கிண்ணத்தைக் கொடுத்தார். அக்கிண்ணம் கேட்பதை யெல்லாம் கொடுக்கும். அதன் உதவியால் சோமன் எல்லோருக்கும் விருந்து அளித்தான்.

2. அடுத்த வீட்டில் ராமன் என்பவன் இருந்தான். அவன் மிகவும் கெட்டவன். சோமன் விருந்து அளிப்பதைக் கண்டான். பொறாமை கொண்டான். மெல்ல சோமனிடம் சென்றான். "நீ எப்படி எல்லோருக்கும் விருந்து அளிக்கிறாய்?" என்று கேட்டான்.

3. ராமனுடைய வஞ்சகம் சோமனுக்குத் தெரியவில்லை. அவனிடம் கிண்ணம் கிடைத்ததைக் கூறினான். ராமன் அந்தக் கிண்ணத்தை அடைய ஆசை கொண்டான். ராத்திரியில் கிண்ணத்தைத் திருடிவிட்டான். பதிலுக்கு வேறு கிண்ணத்தை வைத்துவிட்டான். கிண்ணம் வழக்கம்போல் கேட்பதைக் கொடுக்கவில்லை. அதனால் சோமன் மிகவும் வருத்தப்பட்டான்.

4. சோமன் ராமனிடம் உள்ளதைக் கூறினான். அதனால் நஷ்டம் அடைந்தான். ஆதலால்,

உடையது விளம்பேல்

---

6. முயற்சியை விடக்கூடாது

[துருவன் சரிதம்]

1. உத்தானபாதன் ஒரு அரசன். அவனுக்கு இரண்டு மனைவிகள். மூத்தவள் பெயர் சுநீதி. அவளுக்கு துருவன் என்ற பிள்ளை உண்டு. அவனுக்கு வயது ஐந்து. அரசனுக்கு சுநீதி மேல் அன்பு இல்லை. அவர்களைக் கவனிப்பதும் இல்லை. இளையவளாகிய சுரீசியின் பேரிலேயே அரசன் அன்புடையவனாயிருந்தான்.

2. ஒரு நாள் துருவன் தகப்பனிடம் வந்தான். மடியில் உட்கார்ந்தான். அவன் இளைய

தாய் தடுத்தாள். சிறுவன் அழுதான். தாயிடம் சொன்னான். "நீ தவம் செய்தால் மேன்மை பெறுவாய்" என்று அவன் தாய் சொன்னாள்.

2. துருவன் தவம் செய்ய ஊக்கம் கொண்டான். காடு சேர்ந்தான். ரிஷிகளைத் தரிசித்தான். தவம் செய்யும் வழியைத் தெரிந்துகொண்டான். கோரமான தவம் செய்தான்.

4. இந்திரனும் பல பேய்களும் தவத்தைக் கெடுத்தனர். பாலன் பயப்படவில்லை. ஊக்கத்தைக் கைவிடவில்லை. திருமால் காட்சி கொடுத்தார். மேலான பதவி அளித்தார். அவன் அரசனானான். துருவன் என்றும் அழியாப் புகழையும் பெற்றான். சிறு பையனுடைய ஊக்கத்தைப் பார்த்தீர்களா?

5. துருவன் ஊக்கத்தைக் கைவிடாததனால் மேன்மை அடைந்தான். ஆதலால்,

<u>ஊக்கமது கைவிடேல்</u>

---

7. பிறருக்குக் கொடுத்து உண்ணவேண்டும்

[சிலம்பி கதை]

1. ஒரு ஊரில் ஒரு பெண்பிள்ளை இருந்தாள். அவள் மிகவும் ஏழை. அவள் பெயர் சிலம்பி.

2. ஒரு நாள் அவள் வீட்டிற்கு ஔவை என்ற ஒரு கிழவி வந்தாள். அம்மா! "பசி அதிக

மாய் வாட்டுகின்றது. காதை அடைக்கின்றது. பொறுக்க முடியவில்லை. கொஞ்சம் கூழ் இருந்தால் கொடு'' என்றாள்.

3. சிலம்பி தனக்கு வைத்திருந்த கூழைக் கொடுத்தாள். ஔவை அதைக் குடித்தாள். பசி தணிந்தது. சந்தோஷம் உண்டாயிற்று. அந்த வீட்டுச் சுவற்றில் ஒரு பாட்டு எழுதி இருந்தது. அது முடிவாகா திருந்தது. ஔவை அதைப்பார்த்தாள். சிலம்பி பணக்காரி ஆகவேண்டும் என்று ஔவை எண்ணினாள். அந்தப் பாட்டை முடித்தாள். ஔவை தெய்வீகத் தன்மை பொருந்திய கிழவி யாகையால் அவள் பாடி முடித்ததும் சிலம்பி செல்வமுடையவள் ஆனாள்.

4. சிலம்பி ஐயமிட்டாள். அதனால் செல்வம் பெற்றாள். ஆதலால்,

ஐயம் இட்டு உண்

---

8. பொறாமை கூடாது

[சிசுபாலன் சரிதம்]

1. தரும புத்திரர் என்பவர் ஒரு யாகம் செய்தார். அதற்குப் பல அரசர்கள் வந்திருந்தார்கள். சேதி என்பது ஒரு நாடு. அதற்கு அரசன் சிசுபாலன். அவனும் வந்திருந்தான்.

2. யாகம் முடிந்தது. கிருஷ்ண பகவானுக்கு முதலில் மரியாதை நடந்தது. சிசுபாலன் பொறாமை கொண்டான். "கிருஷ்ணன் இடையன். அவன் மாடு மேய்ப்பவன். அவனுக்கு முதலில் மரியாதை செய்யக்கூடாது" என்று அவமரியாதையாகப் பேசினன். இன்னும் தகாதவைகளை மொழிந்தான். வந்திருந்த அரசர்களில் அநேகர் எவ்வளவு சொல்லியும் சிசுபாலன் கேட்கவில்லை.

3. கிருஷ்ண பகவானுக்கு கோபம் வந்தது. சக்கராயுதத்தை எடுத்து அவனைக் கொன்றார்.

4. சிசுபாலன் பொறாமை கொண்டு, தூஷித்தான். அதனுல் அவன் கேடு அடைந்தான். ஆதலால்,

ஔவியம் பேசேல்

---

9. ஒருவர் செய்த நன்றியை மறக்கக்கூடாது

[பூரு கதை]

1. யயாதி என்பவர் ஒரு ராஜா. அவருக்கு சுக்கிராச்சாரி என்பவர் குரு. அவர் ஒரு காரணத்தால் யயாதியைச் சபித்தார். அதனுல் ராஜா கிழவரானுர்.

2. ராஜா தன் குமாரர்களை அழைத்தார். "என் கிழட்டுத் தன்மையை யாராவது வாங்கிக்

கொண்டு, கொஞ்ச காலத்துக்கு உங்கள் இளமை யைத் தாருங்கள்'' என்றார். எல்லோரும் 'முடி யாது' என்றனர்.

3. அரசரின் மூன்றாவது பிள்ளை எழுந் தான். அவன் பெயர் பூரு. "அப்பா! இந்த சரீரம் தங்களால் உண்டானது. சிறு வயதில் தங்களால் காப்பாற்றப் பட்டேன். என்மீது, நன்றி பாராட் டினீர். நான் அதை மறக்கக்கூடாது. என் இள மையைத் தருகிறேன்'' என்றான்.

4. பூரு அதன்படி கொடுத்தான். சிலகாலம் முதுமையுடன் இருந்தான். அரசர் சந்தோஷம் அடைந்தார். கொஞ்சகாலம் சென்றது. பூருவுக் குத் திரும்ப இளமையைத் தந்தார். பட்டத்தை யும் கட்டினார்.

5. பூரு தன் தந்தை செய்த நன்றியை மறக்கவில்லை. அதனால் அரசனானான். ஆதலால்,

நன்றி மறவேல்

---

10. ஒழுங்கில்லாததைச் செய்யக்கூடாது

[பரீக்ஷித்து சரிதம்]

1. முன் காலத்தில் பரீக்ஷித்து என்று ஒரு ராஜா இருந்தார். அவர் வேட்டையாடக் காடு சென்றார். பல துஷ்ட மிருகங்களைக் கொன்றார். வேட்டை முடிந்து, ஊருக்குத் திரும்பினார்.

2. வழியில் ஒரு ரிஷி தவம் புரிந்துகொண்டு இருந்தார். அவர் கண்கள் மூடி இருந்தன. முனிவருடன் பேச ஆசைப்பட்டார். "சுவாமி" என்று அழைத்தார். முனிவர் பேசவில்லை. கண்களை விழிக்கவும் இல்லை.

3. அரசருக்குக் கோபம் வந்தது. தன்னை அப்பெரியார் அவமதித்ததாக எண்ணினர். அருகில் ஒரு செத்த பாம்பு கிடந்தது. அதை எடுத்தார்; முனிவர் கழுத்தில் போட்டு விட்டுப் போய் விட்டார்.

4. ரிஷிக்கு ஒரு புதல்வர் இருந்தார். அவர் இதைப் பார்த்தார். கடுங்கோபங் கொண்டார். "இவ்வாறு செய்தவர் பாம்பினுலேயே இறக்க" என்று சபித்தார். அதன்படியே அரசர் ஒரு பாம்பினுல் இறந்தார்.

5. பரீக்ஷித்து இயல்பு அல்லாததைச் செய்தார். அதனுல் உயிருக்குத் தீங்கு வந்தது. ஆதலால்,

இயல்பலாதன செயேல்

11. வஞ்சக வார்த்தைகள் பேசக்கூடாது

[யாதவர் சரிதம்]

1. சாம்பன் ஒரு யாதவன். அவனும் சில யாதவர்களும் சேர்ந்தனர். பிண்டாரகம் என்ற

இடத்திற்குப் போயினர். அங்கே பல முனிவர் களைக் கண்டனர். அவர்களை ஏமாற்ற எண்ணி னர்.

2, கர்ப்பமுள்ள பெண்போல் சாம்பனுக்கு வேஷம் போட்டனர். அவனை ஒரு முனிவரிடம் அழைத்துச் சென்றனர். "இவள் வயிற்றில் இருப் பது ஆணு? பெண்ணு?" என்று ரிஷியைக் கேட்ட னர்.

3. முனிவர் கோபம் கொண்டார். "ஆணும் இல்லை. பெண்ணும் இல்லை. ஒரு இரும்பு உலக்கை இருக்கிறது. அது உங்கள் வம்சத்தை நாசம் செய்யும்" என்று சபித்தார்.

4. சாம்பனுடைய வேஷத்தைக் கலைத்தார் கள். அவன் உடையில் இரும்பு உலக்கை இருந் தது. யாதவர்கள் அதைப் பொடி செய்து ஒரு நதியில் எறிந்தனர். நதிக் கரையில் அவைகோரை களாக வளர்ந்தன. பின் யாதவர்களுள் சண்டை நடைபெற்றது. அவர்கள் கோரைகளைப் பிடுங்கி ஒருவருக் கொருவர் அடித்துக்கொண்டனர். முனி வரின் சாபத்தால் கோரைகளெல்லாம் கத்திகளாக மாறிற்று. ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு முடிவில் எல்லோரும் இறந்தனர்.

யாதவர் வஞ்சகமாய்ப் பேசினர். அதனல் தீமை விளைந்தது. ஆதலால்,

வஞ்சகம் பேசேல்

---

12. அகாலத்தில் தூங்கக்கூடாது

[முனிவர் கதை]

1. வெகு காலத்துக்கு முன் ஒரு அரசன் இருந்தான். அவன் பெயர் ஜனமேஜயன். அவன் ஒரு யாகம் செய்தான். அதை நடத்த ஒரு முனிவரை நியமித்தான்.

2. யாகம் நடந்தது. பூர்த்தியாக ஒரு தினம் இருந்தது. முனிவருக்குத் தூக்கம் வந்தது. சிறிது கண் மூடினர்.

3. தூக்கத்தில் முனிவர் காட்டில் இருப்பதாகவும், ஒரு புலி தன்னைக் கொல்ல வருவது போலவும் கனவு கண்டுகொண்டு இருந்தார். அரசர் முனிவர் துங்கினதைக் கவனித்தார்.

4. முனிவரை எழுப்ப எண்ணினர். ஒரு தருப்பையை எடுத்தார். அவரை மெதுவாய்க் குத்தினர். முனிவர் தன்னைப் புலி பிடித்துக்கொண்டது என்று நினைத்தார். திடீரென்று எழுந்தார். அக்கினி குண்டத்தில் விழுந்து இறந்தார்.

5. அகாலத்தில் முனிவர் தூங்கினர். அதனால் கேடு விளைந்தது. ஆதலால்,

அனந்தல் ஆடேல்

———

13. கேடுநினைக்கக் கூடாது

[குடிலன் கதை]

1. ஜீவகன் என்று ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு குடிலன் என்பவன் மந்திரி.

2. குடிலன் ஜீவகனைக் கொல்ல வழி தேடினன். தான் ராஜாவாக வேண்டுமென்று எண்ணி ஒரு தந்திரம் செய்தான். தன் அரசனுக்கும் மற்றொரு அரசனுக்கும் சண்டையை மூட்டினன்.

3. குடிலன், பகை அரசனிடம் சென்றான். "ஜீவகனைத் தனிமையில் காட்டுகிறேன். அவனைக் கொன்று விடுங்கள். என்னை ராஜாவாக ஏற்படுத்தினல், நான் கப்பம் கட்டுகிறேன்" என்றான்.

4. பகை அரசனுக்கு இது பிடிக்கவில்லை. குடிலனுடைய துர்ப்புத்தியை உணர்ந்தான். அவன் கைகளுக்கு விலங்கிட்டான். அவனைச் சிறையில் வைத்தான். கடுமையாய்த் தண்டித்தான்.

5. குடிலன் பிறரைக் கெடுக்க நினைத்தான். தானே கெட்டான். ஆதலால்,

கெடுப்ப தொழி

14. பிறர் பொருளைத் திருடக்கூடாது

[கார்த்த வீரியன் சரித்திரம்]

1. கார்த்த வீரியன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் மிகவும் மதம் கொண்டவன். எல்லோருக்கும் துன்பம் விளைவிப்பான்.

2. ஜமதக்னி என்ற முனிவரிடம் ஒரு பசு இருந்தது. அது மிகவும் மேன்மை வாய்ந்தது. கார்த்த வீரியன் முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றான். அப் பசுவைக் கண்டான். அதன்மீது பிரியம் உண்டாயிற்று. அதைத் தனக்கு வைத்துக்கொள்ளத் தீர்மானித்தான்.

3. பர்ணசாலையைச் சுற்றிலும் அழகிய மரங்கள் இருந்தன. கார்த்தவீரியன் அதை அழித்தான். பசுவைக் கொள்ளை கொண்டு சென்றான்.

4. முனிவருக்கு பரசுராமர் என்ற பிள்ளை இருந்தார். அவருக்கு இது தெரிந்தது. அவர் கார்த்த வீரியனுடன் யுத்தம் செய்தார். யுத்தத்தில் கார்த்தவீரியன் மாண்டான். பரசுராமர் பசுவை மீட்டிச் சென்றார்.

5. கார்த்த வீரியன் ஒருவர் பொருளை அபகரித்தான். அதனால் உயிர் இழந்தான். ஆதலால்,

கொள்ளை விரும்பேல்

———

15. குற்றமான விளையாட்டுக் கூடாது

[அசமஞ்சன் கதை]

1. சகரர் ஒரு ராஜா. அவர் அயோத்தியை ஆண்டார். அவருக்கு அசமஞ்சன் என்று ஒரு குமாரன் இருந்தான். அவன் அதிக விளையாட்டுப்புத்தி யுள்ளவன்.

2. சில சமயங்களில் ஊரில் உள்ள குழந்தைகளை ஆழமான ஆற்றில் தள்ளுவான். ஆற்றில் தள்ளப்பட்ட குழந்தைகள் துடிப்பதைக்கண்டு அசமஞ்சன் சந்தோஷப்படுவான். இதனால் அநேகம் குழந்தைகள் இறந்தன. பெற்றோர்கள் அரசனிடம் சென்று முறையிட்டார்கள்.

3. அரசர் அதிகக் கோபம் கொண்டார் தன் மகனை நாட்டை விட்டுக் காட்டுக்குத் துரத்தினார். அங்கே அசமஞ்சன் அனேக கஷ்டங்கள் அடைந்தான்.

4. அவன் விளையாட்டு, குற்றமுள்ளது. அதனால் அவன் காடு சென்று கஷ்டப்பட்டான். ஆதலால்,

கோதாட் டொழி

---

16. பொய்யை மெய்போல் பேசக்கூடாது

[கோபாலன் கதை]

1. புலியூரில் கோபாலன் என்ற சிறுவன் இருந்தான். அவன் அருகில் உள்ள காட்டில் ஆடுகள் மேய்ப்பான். அவன் ஒரு விளையாட்டுப் பையன்.

2. பக்கத்தில் உள்ள வயல்களில் சிலர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவனுக்கு ஆபத்து நேரிட்டால் உதவிக்கு வருவதாகச் சொன்னார்கள்.

3. கோபாலன் அவர்களைப் பரிகாசம் செய்ய எண்ணினான். "புலி, புலி" என்று கத்தினான். அம்மனிதர்கள் ஓடி வந்தார்கள். புலியைக் காணவில்லை. கோபாலன் அவர்களைப் பரிகாசம் செய்தான். அவர்கள் திரும்பிவிட்டார்கள். கோபாலன் இரண்டாம் முறையும் அவர்களை ஏமாற்றினான்.

4. கடைசியில் உண்மையாகவே புலி வந்துவிட்டது. கோபாலன், "புலி, புலி" என்று கதறினான். 'கோபாலன் முன் போலவே பொய் கூறுகிறான்' என்று அவர்கள் எண்ணினார்கள். அதனால் அவனுக்கு உதவி செய்ய வரவில்லை. புலி ஆடுகளைக் கொன்றதோடு கோபாலனையும் கொன்றது.

70873

5. கோபாலன் பொய்யை மெய்போல் பேசி னுன். அதனுல் அவன் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது. ஆதலால்,

சித்திரம் பேசேல்

---

17. பிறர் முகம் கோணும்படி பேசக்கூடாது

[துரியோதனன் கதை]

1. அஸ்தினுபுரி என்பது ஒரு நகரம். அதன் அரசன் துரியோதனன். கிருஷ்ண பகவான் ஒரு சமயம் அவனிடம் பாண்டவர்களுக்காக தூதாக வந்தார். இதையறிந்த துரியோதனன், "கிருஷ்ணனை ஒருவரும் ஊருக்குள் அழைக்கக்கூடாது" என்ருன்.

2. விதுரர் என்று ஒருவர். அவர் துரியோதனனின் சிறிய தகப்பனுர். மிகவும் சிறந்த யுத்த வீரர். கிருஷ்ண பகவான் விதுரர் வீட்டிற்கு வந்தார். விதுரருக்கு அதிக ஆநந்தம் பொங்கியது. பகவானைப் பலமுறை வணங்கினுர். வாயாற வாழ்த்தினுர். அவருக்குச் செய்யவேண்டியதைக் குறைவில்லாமல் செய்தார்.

3. துரியோதனனுக்கு இது தெரிந்தது. விதுரரை ராஜ சபைக்கு அழைத்து வரும்படி உத்திரவு இட்டான். சபை நடுவில் அவரைத் தாறுமாருகத் திட்டினுன்.

4. விதுரர் முகம் சுளித்து, "இனி நான், உனக்கு உதவி செய்வதில்லை. என் வில்லையும் முறித்து விடுகிறேன். உன் இராஜ்ஜியத்திலும் வசிப்பதில்லை" என்று கூறி வெளியேறி விட்டார்.

5. துரியோதனன் விதுரர் முகம் சுளிக்கச் சொன்னான். அதனால் பலசாலியான ஒரு வீரரை இழந்தான். ஆதலால்,

சுளிக்கச் சொல்லேல்

---

18. சூதாடுதல் கூடாது

[தருமபுத்திரர் கதை]

1. துரியோதனன் அஸ்தினபுரத்து அரசன். தரும புத்திரர் இந்திர பிரஸ்தத்து அரசர். பாண்டவர்களில் மூத்தவர்.

2. துரியோதனன் தருமருக்கு விருந்து செய்தான். "பொழுது போக்குக்காகச் சிறிது நேரம் சூதாடலாம்" என்று துரியோதனன் சொன்னான். தரும புத்திரர் அதற்கு இசைந்தார். இருவரும் விளையாடினார்கள்.

3. தரும புத்திரர் ஆஸ்தி முழுவதையும் பந்தயமாக வைக்க நேர்ந்தது. எல்லாவற்றையும் தோற்று இழந்தார். முடிவாக அவரோடு அவர்

தம்பிகளும் மனைவியும் காடு செல்ல நேர்ந்தது. காட்டில் பல கஷ்டங்கள் அடைந்தார்கள்.

4. பின் ஒரு தடவை அவர் விராட நகரத்து அரசனோடு சூதாடினர். அதனால் விராடராஜன் அவரை நெற்றியில் அடித்துக் காயம் உண்டாக்கினன்.

5. தரும புத்திரர் சூதாடினர். அதனால் பல கேடுகள் உண்டாயின. ஆதலால்,

சூது விரும்பேல்

19. சேரும் இடத்தை தெரிந்து சேரவேண்டும்

[சல்லியன் சரிதம்]

1. மத்திரம் என்பது ஒரு தேசம். அதற்கு அரசன் சல்லியன். அவன் பாண்டவர்களுக்குச் சொந்த மாமன்.

2. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சண்டை நடந்தது. சல்லியன் பாண்டவர்களுடன் சேர எண்ணங்கொண்டான். அவர்களுக்கு உதவி செய்ய திரண்ட சேனையுடன் வந்தான்.

3. வழியில் அந்த அரசனை துரியோதனன் சந்தித்தான். ராஜனையும் அவனுடன் வந்தவரையும் உபசரித்தான். அரசனுக்கு எண்ணம் மாறி விட்டது. சேரவேண்டிய இடத்தை நன்ருய்க் கவனிக்கவில்லை. துரியோதனனோடு சேர்ந்து விட்டான்.

4. யுத்தம் தொடங்கிற்று. இரண்டு கக்ஷியி லும் அநேகர் மாண்டனர். அதில் சல்லியன் இறந்தான்.

5. பாண்டவர்கள் தர்ம சீலர்கள். மேலும் பலமுடையவர்கள். சல்லியன் அவர்களோடு சேர வில்லை. அதனால் அவன் இறக்கும்படியாயிற்று. ஆதலால்,

சேரிட மறிந்து சேர்

---

20. பிறர் பழிக்கும்படி நடக்கக் கூடாது

[வேதநிதி கதை]

1. ஒரு ஊரில் வேதநிதி என்று ஒருவன் இருந்தான். அவன் மஹா துஷ்டன். ஒருவருக் கும் அடங்காதவன். ஊரார் அவனைச் 'சீ, சீ,' என்று வெறுத்தார்கள். அதனால் அவன் தந்தை அவனைக் காட்டிற்குத் துரத்தி விட்டார்.

2. வேதநிதி காட்டில் பல கஷ்டங்கள் அடைந்தான். ஒரு சமயம் நடு இரவில் ஒரு சிவா லயத்திற்குச் சென்றான். அங்கே இருந்த பொருள் களைக் களவாடித் திரும்பினான். அவன் கால் ஒரு காவல்காரன் தலையில் பட்டது. சேவகன் விழித்து அவனைப் பிடித்துக் கொண்டான்.

3. இந்த விவரம் மற்றக் காவல்காரருக்கும் தெரிந்தது. எல்லாரும் வேதநிதியை அடித்தார்கள். அவனால் பொறுக்க முடியாது இறந்தான்.

4. வேதநிதி 'சை' என்று ஊரார் கூறும்படி நடந்தான். அதனால் தீமை விளைந்தது. ஆதலால்,

சை எனத் திரியேல்

---

21. தருமம் செய்ய வேண்டும்

[ரகு மஹாராஜன் கதை]

1. வடக்கே ஒரு நகரம் இருந்தது. அதன் பெயர் அயோத்தி. அதை அரசாண்டவர் ரகு மஹாராஜா.

2. அவர் ஒரு யாகம் செய்தார். அதில் அனேகம் பொருள்கள் தானம் செய்தார். எல்லாம் செலவாய் விட்டன. மண் பாத்திரங்களே பாக்கியிருந்தன.

3. அந்தச் சமயம் ஒரு முனிவர் வந்தார். கொஞ்சம் பொருள் கேட்டார். அரசரிடம் பணம் இல்லை. தானம் செய்ய விரும்பினார். பணத்துக்கு அதிபதி குபேரன். ராஜா அவனிடம் சென்றார். வேண்டிய பொருளைப் பெற்றார். முனிவருக்குக் கொடுத்தார். ரிஷி சந்தோஷம் அடைந்தார்.

மகாராஜாவை வாழ்த்தினார். அவர் வமிசத்தார் களுக்கெல்லாம் ரகு என்ற பெயர் வரும்படி செய் தார்.

4. ரகு மகாராஜா தானம் கொடுப்பதை விரும்பினார். அதனால் கீர்த்திபெற்றார். ஆதலால்,

தானமது விரும்பு

---

22. விஷ்ணுபக்தி யுடையவனா யிருக்க வேண்டும்

[சூரதாசர் கதை]

1. சூரதாசர் என்பவர் ஒரு ராஜாங்கத்தில் உத்தியோகமாய் இருந்தார். எப்பொழுதும் மஹா விஷ்ணுவையே துதிப்பார். ஆலயத்துக்குப் போவார். பணிவிடைகள் செய்வார்.

2. ராஜ பொக்கிஷத்திலுள்ள பணத்தை எடுத்து ஒரு கோயில் கட்டினார். இது ராஜாவுக் குத் தெரிந்து, அவரை அழைத்துவர உத்தரவு செய்தார்.

3. சூரதாசர் பல பெட்டிகளை எடுத்தார். கற்களை அதில் நிறைத்து வைத்தார். அரசருக்கு பயந்து காட்டிற்கு ஓடி விஷ்ணுவைத் தியானம் செய்தார். அரசர் கோபமாய் வந்து பெட்டியைத் திறந்தார். அதில் விலை உயர்ந்த ரத்னங்கள் இருந்தன.

4. அதைக்கண்டு அரசர் ஆச்சரியம் கொண் டார். சூரதாசரைத் தேடி, ஒரு காட்டில் கண்டார்.

நடந்ததைத் தெரிவித்து மறுபடியும் தன் ராஜ்ஜியத்திற்கு அழைத்து வந்தார். திருமாலையே தொழுதுகொண்டு இருக்குமாறு கட்டளை இட்டார்.

5. சுரதாசர் திருமாலுக்குத் தொண்டு செய்தார். அதனால், பெருமை அடைந்தார். ஆதலால்,

திருமாலுக் கடிமை செய்

---

23. பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாது

[மாரீசன், சுபாகு சரிதம்]

1. முன்காலத்தில் இரண்டு ராக்ஷதர் இருந்தனர். இருவரும் சகோதரர்கள். மூத்தவன் பெயர் மாரீசன்; இளையவன் பெயர் சுபாகு. இருவரும் மிகவும் கொடியவர்கள்.

2. அவர்கள் மனிதர்களைக் கொன்று உண்பார்கள். ரிஷிகளைத் துன்பப் படுத்துவார்கள். நற்காரியம் செய்பவர்களுக்குத் தீமையே செய்வார்கள்.

3. விசுவாமித்திரர் என்ற முனிவர் ஒரு யாகம் செய்தார். யாகத்தைப் பாதுகாக்க ராமரும் லக்ஷமணரும் வந்திருந்தனர்.

4. ராக்ஷசர் யாகத்தைக் கெடுக்க எண்ணினர். மாமிசத்தையும் ரத்தத்தையும் யாக சாலை

யில் இறைத்தனர். ராமருக்கு அதிக கோபமுண்டாயிற்று. இரண்டு பாணங்களை எய்தார். ஒன்று மாரீசனைச் சமுத்திரத்தில் ஆழ்த்திவிட்டது. மற்றொன்று சுபாகுவைக் கொன்றது.

5. இருவரும் பிற உயிர்களுக்குத் தீங்குசெய்தார்கள். அதனால் அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டது. ஆதலால்,

தீவினை யகற்று

---

24. பிறரைப் பழிக்கக் கூடாது

[கந்தருவர் கதை]

1. ஸ்ரீசைலம் என்ற மலையில் ஒரு முனிவர் தவம் செய்துகொண்டு இருந்தார். அவர் நீளமான சடைகளை உடையவர். நகங்களும் நீண்டு வளர்ந்து இருந்தன. அவர் பெயர் சிவாநந்தர்.

2. கந்தருவர் என்று ஒரு வகுப்பினர் உண்டு. மிக்க அழகு உள்ளவர்கள். அவர்களில் இருவர் அந்த மலையின் வழியாய்ச் சென்றனர். அந்த ரிஷியைப் பார்த்தனர். அவர் தோற்றத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். "இவர் என்ன கரடியா?" என்று பரிஹாசம் செய்தனர்.

3. முனிவர் சிஷ்யர்கள் அதைக் கவனித்தார்கள். அதிகம் கோபம் கொண்டார்கள். கந்தரு

வர்களை கரடிகளாகும்படி சிஷ்யர்கள் சபித்து விட்டார்கள்.

4. கந்தருவர் ரிஷியை இகழ்ச்சியாய்ப் பேசினர். அதனால் கேடு அடைந்தனர். ஆதலால்,

பழிப்பன பகரேல்

---

25. பெரியோரையே துணைகொள்ள வேண்டும்

[இந்திரன் கதை]

1. முன் ஒரு காலத்தில் காலகேயர்கள் என்ற அசுரர்கள் இருந்தனர். அவர்கள் தேவர்களுக்குத் துன்பம் செய்து வந்தனர். தேவர்களால் பொறுக்க முடியவில்லை. தங்கள் அரசனிடம் சென்று முறையிட்டனர்.

2. தேவர்களுக்கு அரசன் இந்திரன். அவன் அசுரர்களுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டான். அசுரர்கள் கடலில் ஒளிந்து கொண்டார்கள். இந்திரன் கடலினுள் செல்ல முடியவில்லை.

3. அகஸ்தியர் என்று ஒரு ரிஷி இருந்தார். இந்திரன் அவருடைய துணையை வேண்டினான். அந்த ரிஷி கடல் நீர் முழுவதையும் உள்ளங்கையிலுள்ள ஜலத்தைக் குடிப்பதுபோல் குடித்து விட்டார். இந்திரன் சுலபமாக அசுரருடன் யுத்தம் செய்து எல்லோரையும் கொன்றான்.

4. இந்திரன் பெரியோரைத் துணைக்கொண்டான். அதனால் அவன் ஜெயமடைந்தான். ஆதலால்,

பெரியோரைத் துணைக் கோள்

26. பொருளைக் காப்பாற்ற வேண்டும்

[கோவலன் கதை]

1. காவிரிப்பூம் பட்டினம் என்று ஒரு நகரம். அதில் ஒரு பணக்காரன் இருந்தான். அவன் பெயர் கோவலன். அவன் மனைவியின் பெயர் கண்ணகி.

2. தன்னிடம் இருந்த பணத்தைக் கண்டபடி செலவு செய்தான். அவன் செல்வம் முழுவதும் போயிற்று.

3. சில நாள் சென்றபின் வியாபாரம் செய்ய எண்ணினான். மனைவியிடம் தெரிவித்தான். அவள் சிலம்பை வாங்கிக் கொண்டான். மதுரைக்குச் சென்று சிலம்பை விலை கூறினான்.

4. அங்கே அவன் திருடன் என்று பிடிக்கப்பட்டான். மதுரை அரசன் அவனைக் கொல்லக் கட்டளை இட்டான். அதன்படி அவன் கொல்லப்பட்டான்.

5. கோவலன் பணத்தைப் போற்றவில்லை. அதனால் அவனுக்குத் துன்பம் வந்தது. ஆதலால்,

பொருள்தனைப் போற்றி வாழ்

27. கஷ்டக்காலங்களில் மனம் தடுமாறக்கூடாது

[பத்மினி சரிதம்]

1. பீம்சிங் என்பவர் சித்தூர் அரசர். அவர் மனைவி பத்மினி. அவள் மிக்க அழகுள்ளவள்.

2. அல்லாவுதீன் ஒரு மகமதிய அரசன். பத்மினியை மனைவியாக்கிக் கொள்ள எண்ணினான். பீம்சிங்குடன் சண்டை இட்டான். அவரைச் சிறை செய்தான்.

3. பத்மினி மனம் கலங்கவில்லை. கஷ்டத்திற்காக வருத்தப்படவு மில்லை. பல பல்லக்குகள் தயாரித்தாள். போர்வீரர்களுக்கு பெண் வேடம் அணிவித்தாள். தானும் ஒன்றில் அமர்ந்தாள். அல்லாவுதீனிடம் சென்றாள்.

4. அவனைக் கண்டு அவனை மணந்துகொள்வதாகக் கூறினாள். அதற்குமுன் தன் புருஷனைப் பார்க்க வேண்டும் என்றாள். அவன் உத்திரவு கொடுத்தான். பத்மினி சென்றாள். கணவனைப் பல்லக்கில் ஏற்றாள். இருவரும் தப்பி ஓடினர்.

5. பத்மினி அடைந்த துன்பம் பெரிது. ஆயினும் மனம் தடுமாறவில்லை. அதனுல் இன்பம் அடைந்தாள். ஆதலால்,

மனம் தடுமாறேல்

——

28. விரோதிகளுக்கு இணங்கிப் பேசக்கூடாது

[வலன் கதை]

1. வலன் என்று ஒரு அசுரன். அவன் பலசாலி. தேவர்களைத் தொந்தரவு செய்து வந்தான். அவர்கள் இந்திரனிடம் சென்று முறையிட்டனர்.

2. இந்திரன் வலனிடம் சென்ருன். சண்டை செய்தான். இந்திரனுல் முடியவில்லை. ஒரு தந்திரம் செய்தான். " நீ பலசாலி, நான் உன்னுடன் சிநேகமாய் இருக்க விரும்புகிறேன் " என்ருன். வேண்டியவற்றைத் தருவதாகவும் சொன்னுன்.

3. வலன், "எனக்கு ஒன்றும் வேண்டாம். நீ என்ன விரும்புகிருய், நான் தருகிறேன்" என்று பதில் சொன்னுன்.

4. இந்திரன் "நான் யாகம் செய்யப்போகிறேன். அதற்கு உன்னையே பலி இட நினைக்கிறேன், நீ வரவேண்டும்" என்ருன். வலன் அவ்விதமே செய்தான். இந்திரன் அவனை யாகத்தில் பலியாக்கினுன்.

5. அசுரனுக்கு இந்திரன் மாற்றான். அதை அவன் நினைக்கவில்லை. இடம் கொடுத்துப் பேசினான். அது தீமையாய் முடிந்தது. ஆதலால்,

மாற்றானுக்கு இடம் கோடேல்

---

29. பெரியோர் சொற் கேட்கவேண்டும்

[ரோம பாதன் கதை]

1. ரோமபாதன் ஒரு ராஜா. அவன் நாட்டில் பல வருஷங்களாக மழை இல்லை. அதனால் பெருத்த பஞ்சம் உண்டாயிற்று. எல்லோரும் துன்பம் அடைந்தார்கள். அனேக ஜீவராசிகள் இறந்தும் போயின. ராஜா கவலையுற்றார்.

2. அரசன் மேலோரான ரிஷிகளை வரவழைத்தான். பஞ்சத்தைப் போக்க வழி கேட்டான். ரிஷிகள் "கலைக்கோட்டு முனிவர் இங்கே வந்தால் மழை வரும்" என்றார்கள்.

3. அரசன் முனிவரை வரவழைத்தான். நல்ல மழை பெய்தது. பயிர் பச்சைகள் நன்றாய் வளர்ந்தன. நாடு செழித்தது. எல்லோரும் இன்பமாய் வாழ்ந்தனர்.

4. வேந்தன் மேலான தபசிகள் சொல்லைக் கேட்டான். அதனால் மேன்மை அடைந்தார். ஆதலால்,

மேல் மக்கள் சொல் கேள்

30. தற்புகழ்ச்சி ஆகாது

[வந்தி கதை]

1. ஜனகர் என்று ஒரு ராஜா. அவரிடம் ஒரு வித்துவான் இருந்தார். மற்றவர்களைவிட அவர் கெட்டிக்காரர். பெயர் வந்தி.

2. அவர் புலவர்களை வாதம் செய்ய அழைப்பார். அவர்கள் தோற்று விடுவார்கள். அவர்களை சமுத்திரத்தில் போட்டுவிட உத்திரவு இடுவார். இவ்வாறு பலர் கடலில் எறியப்பட்டனர்.

3. அஷ்டா வக்கிரர் என்று ஒருவர். அவருக்கு வயது பத்து. அதற்குள் எல்லா நூல்களையும் கற்றுக்கொண்டார். அவர் தந்தையும் வந்தியால் மடிந்தவர். அதனால் வந்தியிடம் வாது செய்யப் புறப்பட்டார்.

4. வந்தி வல்லமை பேசினான். தன்னை வெல்ல முடியாது என்றான். வாதம் ஆரம்பிக்கப் பட்டது. தோற்றவர்களைக் கடலில் போடும்படி பந்தயம் வைக்கப்பட்டது. சிறுவர் ஜெயித்தார். வல்லமை பேசிய வந்தி தோற்றார். அவர் கடலில் எறியப்பட்டார். ஆதலால்,

வல்லமை பேசேல்

---

31. தன்மையறிந்து சிநேகிக்க வேண்டும்

[குருவி கதை]

1. பம்பை நதிக்கரையில் ஒரு அத்தி மரம் உண்டு. அதில் ஒரு காக்கை வசித்து வந்தது.

இருந்தன.

2. ஒரு சமயம் இரண்டும் இரை தேடச் சென்றன. வழியில் ஒரு இடையன் சென்ருன். அவன் தலையில் தயிர்ப்பானை இருந்தது. கையில் ஒரு தடி வைத்திருந்தான். தயிர்ப்பானை திறந் திருந்தது.

3. துஷ்டக் காகம் தயிர்க் கட்டியைத் தின்ன ஆசை கொண்டது. பானையில் உள்ள தயிர்க் கட் டியைக் கொத்தித் தின்றது. இடையன் அதை யறிந்து விரட்டினன். மறுபடி காகம் தயிர்க் கட்டி யைத் தின்றது. குருவி ஒன்றும் செய்யாமல் கூட வே சென்றது.

4. இப்படியே காகம் அடிக்கடி தொந்தரவு செய்தது. இடையன் கோபம் கொண்டான். கையில் இருந்த தடியை வீசினன். காகம் ஓடிவிட் டது. ஆனல் குருவி அத்தடியால் அடிபட்டு இறந்தது.

5. குருவி துஷ்டப் பறவையான காகத்து டன் சிநேகம் செய்தது. அதனல் இறந்தது. ஆதலால்,

இணக்கமறிந் திணங்கு

---

1. பாடலீபுரம் என்பது ஒரு பெரிய பட்டினம். அதில் உத்தமன் என்ற சிறுவன் உண்டு. அவனுடைய தாய் தந்தையர் வயதானவர்கள். கண் தெரியாத குருடர்கள்.

2. உத்தமன் அவர்களுக்கு வேண்டியதைச் செய்வான். வீடுதோறும் சென்று பிச்சை எடுப்பான். அவர்களுக்கு உணவு அளிப்பான். பிறகு தானும் சாப்பிடுவான். ஊரார் அவனைப் புகழ்ந்தனர்.

3. ஒரு சமயம் அவனுடைய தாய் தந்தையர் காசிக்குப் போக ஆசைப்பட்டார்கள். உத்தமன் அவர்களுடைய விருப்பத்தை அறிந்தான். ஒரு காவடி கட்டி அதில் அவர்களை வைத்தான். தோளில் தூக்கிக்கொண்டு நடந்தான்.

4. கடைசியில் காசி போய்ச் சேர்ந்தார்கள். தங்களுடைய புத்திரனை வாழ்த்தினார்கள். காசி ராஜன் இதை அறிந்தான். உத்தமனை அழைத்து உயர்ந்த பதவி கொடுத்தான். அவனுடைய தாய் தந்தையரை வணங்கினான். அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தான்.

5. உத்தமன் தாய் தந்தையரைப் பேணிக் காத்தான். அதனால் உயர்வு பெற்றான். ஆதலால்,

தந்தை தாய்ப் பேண்.

The B. N. Press, Educational Printers, Madras.

70873
-600 008.

Suitable for Elementary Schools.

*** Approved by the Text Book Committee, Madras.**

*	1.	மீனாக்ஷி தமிழ் வாசகம் - முதற் புத்தகம்	0 2 0
*	2.	ஷை இரண்டாவது	0 2 0
*	3.	ஷை மூன்றாவது	0 4 0
*	4.	ஷை நான்காவது	0 5 0
	5.	ஷை ஐந்தாவது	0 6 0
*	6.	சுகாதார வாக்கிய விளக்கம்	0 1 0
*	7.	ராமாயணச் சுருக்கம்	0 2 0
*	8.	பாரதச் சுருக்கம்	0 3 0
*	9.	சன்மார்க்க போதினி	0 5 0
*	10.	சிறுகதை யறுபது	0 6 0
*	11.	விவசாய வாக்கிய விளக்கம்	0 4 0
*	12.	சத்தியமே ஜயம்	0 5 0
*	13.	ராணா பிரதாப்	0 4 0
*	14.	ஸ்ரீ மீனாக்ஷி	0 3 0
*	15.	சுகாதார உலக நீதி	0 2 0
	16.	மீனாக்ஷி கணித வாய்ப்பாடு	0 0 6
	17.	மீனாக்ஷி எண்சுவடி வாய்ப்பாடு	0 1 0
	18	கொக்கிப் புழுநோய்	0 1 0
*	19.	பாலர் இந்தியச் சரித்திரக் கதைகள்	0 5 0
*	20.	இராஜாங்க முறை I	0 4 0
*	21.	கதா மஞ்சரி I	0 3 0
	22.	கதா மஞ்சரி II	0 4 0
	23.	கதா மஞ்சரி III	0 6 0
	24.	ஹரிஹர பக்தர்கள்	0 3 0
*	25.	Premier English Reader Primer	0 2 0
*	26.	,, ,, ,, Book I	0 4 0
	27.	,, ,, ,, Book II	0 5 0

வி. சூ. சுவாமிநாதன், புத்தக வியாபாரி, மதுரை.